# நீதித்துறை உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்-2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நீதித்துறை உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒரு அரசாங்க வங்கியிலுள்ள நிலையான வைப்புக்கள் தொடர்பாக 2012 சனவரி 06 இலிருந்து 2013 சனவரி 17 வரையான காலத்திற்காக ரூபா 1,116,894 தொகையான வட்டி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதில் 2013 சனவரி 01 இலிருந்து 2013 சனவரி 17 வரையான காலம் தொடர்பான ரூபா 59,140 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்காகச் செலவு வைக்கப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டிற்கான வட்டி ரூபா 59,140 தொகையால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டிருந்தது.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டங்கள் ஆகக் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 10,586,879 தொகையான பற்றாக்குறையினை விளைவித்திருந்ததுடன் ஒப்பிடுகையில் தொடர்புபட்ட முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,252,107 ஆக இருந்தமையானது நிதிசார் விளைவுகளில் ரூபா 665,228 தொகையான ஓரளவு முன்னேற்றத்தை சுட்டிக்காட்டியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### நிதிசார் செயலாற்றல்

பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 11,541,986 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவுகள் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| களுத்துறை உச்ச நீதிமன்ற வலயம் | - | - | 299,872 |
| ஹம்பாந்தோட்டை/ மாத்தறை உச்ச நீதிமன்ற வலயம் | 1,636,205 | 1,121,183 | 3,354,010 |
| சிலாபம்/ புத்தளம் உச்ச நீதிமன்ற வலயம் | - | 1,788,758 | 2,623,768 |
| நீதிமன்ற மேம்பாட்டு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அலுவலகம் | - | - | 209,081 |
| கொழும்பு உச்ச நீதிமன்ற வலயம் | 2,828,298 | 2,671,632 | 7,723,207 |
| குருனாகல் உச்ச நீதிமன்ற வலயம் | 1,180,988 | 504,530 | 1,829,955 |
| கேகாலை உச்ச நீதிமன்ற வலயம் | - | 1,974,383 | 2,392,492 |
| காலி உச்ச நீதிமன்ற வலயம் | - | - | 63,697 |
| அவிசாவளை உச்ச நீதிமன்ற வலயம் | - | - | 372, 598 |

| | | | |
|---|---|---|---|
| அனுராதபுரம் உச்ச நீதிமன்ற வலயம் | - | 760,000 | 760,000 |
| கம்பஹா உச்ச நீதிமன்ற வலயம் | 5,896,495 | 2,889,205 | 8,785,700 |
| | ----------------- | ----------------- | ----------------- |
| மொத்தம் | 11,541,986 | 11,709,691 | 28,414,380 |
| | ======== | ======= | =========== |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்**

நிதியத்தின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக ஒரு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

**4.2 பாதீடு**

2012 ஆம் ஆண்டிற்காக ஒரு பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

நிதியத்தின் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்